கிறிஸ்துவ நம்பிக்கை என்பது விண்ணக எருசலமில் ஒரு நாள் எனது ஆண்டவரை நேருக்கு நேர் பார்ப்பேன் என்பது. என் மீது அவர் கொண்டிருக்கும் பேரன்பை நித்தியத்திற்கும் அங்கு வியந்திருப்பேனே? கண்ணீர் கணவாயில் எனது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாலும், எனது வாழ்வை மாற்றியமைத்து, இறையரசுக்கு அழைத்துச் செல்லும் ஆவலை என்னில் எழுச்சியூறச் செய்வதே, இந்த நம்பிக்கை. மனிதக்குலத்தில் அல்லது வன்முறையும் வெறுப்பும் சூழ்ந்திருக்கும் இவ்வுலகில், இந்த நம்பிக்கை வார்த்தை மனுவுருவெடுத்து, ஆன்மீக வகையில் அன்பு மொழி பேச வேண்டுமென்பதல்ல. மாறாக, தன்னையே முழுமையாக வழங்கும் அன்புக் கடமையை ஆற்றுவது. இதனால் இவ்வன்பு, அதன் பிறப்பிடத்திற்குக் நம்மைக் கொண்டு சேர்க்கும்.

கடவுள் எனக்குக் கொடையாக அளித்த எனது ஆன்மாவின் மீட்பே, எனது நம்பிக்கையின் எதிர்பார்ப்பு. கடவுள் முதலில் என்னை அன்பு செய்வதால்தான், நான் அவரை அன்பு செய்கிறேன். இயேசு கிறிஸ்துவில் எனக்காக தம்மையே அளித்த அவரிடம் எனது வாழ்கையை ஒப்படைக்க நான் என்றும் ஆவலுடன் காத்திருக்கிறேன். நான் என்னையே அன்பு செய்கிறேன் என்பது, கடவுளின் அன்புக்கு என்னையே நான் அர்ப்பணிக்கிறேன் என்றும் எனது சொந்த மீட்பை ஆசிக்கிறனே் என்றும் அர்த்தமாகும். செபத்திலும் அருட்சானத்திலும் ஆறுதல் தேடும் வேளையில் எனது அச்சத்தையும் நடுக்கத்தையும் போக்குகிறனே் (பிலி. 2:12). எனது அயலானை நேசிக்கிறேன் என்பது அவர்களும் மீட்பு பெறுவதை விரும்புகிறனே் என்று அர்த்தம். அதற்காக சிலுவை வரை கிறிஸ்து சென்ற பாதையில் நானும் செல்ல தயாராகயிருக்கிறேன்.

அனைத்து ஆன்மாக்களும் மீட்பு பெற வேண்டும். அதற்கு இயேசு கிறிஸ்துவே நமது ஒரே நம்பிக்கை. இவ்வுலகில் ஒரு மாய 'இறையரசை' உருவாக்க நாம் இங்கு இல்லை. இதனால் கிறிஸ்து மாட்சிமையில் மீண்டும் வரும்போது, பரலோகத்தில் இருக்கும் தந்தையிடம் நம்மோடு திரும்ப வேண்டிய தேவையில்லை என இயேசு கருதக்கூடாது. நாம் இங்கு இருப்பது, "காண்பவற்றையல்ல, நாங்கள் காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை; காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை"(2கொரி. 4:18). ஏனெனில், , "நமக்கோ விண்ணகமே தாய்நாடு; அங்கிருந்து இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம்"(பிலி. 3:20).

இந்த கண்ணோட்டத்தில், பரம சந்தோஷத்திற்கான நமது ஆவலைப் பூர்த்திச் செய்யும் கடவுளின் கொடையான நம்பிக்கை ஒளிக்கு என்னோடு நீங்கள் அனைவரும் விழித்தெழ வேண்டுமென இன்றைய திருவருகை காலத்தின் இந்த முதல் ஞாயிறு நற்செய்தி வலியுறுத்துகிறது. நித்தியமான கடவுளின் மகிமை மீதான இந்த நம்பிக்கை, இவ்வுலகில் நமது வாழ்வின் பாதையைச் சீர்பார்க்கச் செய்ய வேண்டும். நிரந்திரமாக அனுபவிக்கவிருக்கும் நித்திய மகிழ்ச்சியின் எதிரொலியாக தற்போதைய மகிழ்ச்சியை நாம் காண வேண்டும். தற்போதைய நமது இவ்வுலக இன்னல்கள், கிறிஸ்துவின் பாடுகளோடு ஒப்பிடுகையில் அற்பமாக கருத வேண்டும். இந்த இன்னல்களினால் நமது நம்பிக்கை வலுவடைந்து, சிலுவையில் ஒன்றிணைக்கப்பட்டு நமது மீட்புக்கும் நமது அயலான் மீட்புக்கும் நாம் பணியாற்றுகிறோம். அவர் மீண்டும் வரும் போது நம்மில் வாழும் நம்பிக்கை, எழ வேண்டும். இதுவே திருவருகை காலத்தின் செய்தி. "இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" (தி.ப. 1:11).

அற்ப காரியங்களிலும், சுகம் அல்லது வெற்றியிலும் நம்பிக்கை கொள்ளாமல், கிறிஸ்துவின் வாக்குறுதியில் நம்பிக்கை வையுங்கள்.

"இதோ, ஒரு மறை பொருளை உங்களுக்குச் சொல்கிறேன்; நாம் யாவரும் சாகமாட்டோம்; ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம். ஒரு நொடிப்பொழுதில், கண் இமைக்கும் நேரத்தில், இறுதி எக்காளம் முழங்கும் போது இது நிகழும். எக்காளம் முழங்கும்போது இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர்; நாமும் மாற்றுரு பெறுவோம். ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும். அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்து கொள்ளும்போது மறைநூலில் எழுதியுள்ள வாக்கு நிறைவேறும்: "சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி கிடைத்தது"" (1கொரி. 15:51–54) ✢

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

NEWBEC

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

3 டிசம்பர் 2017
திருவருகை காலம்
1ம் ஞாயிறு

# எழுச்சியூட்டும் நம்பிக்கை





## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2017 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*

*கிறிஸ்துவே நமது எதிர்நோக்கு*

## *மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்*

## *( 1848 – 2018 )*

**<u>பங்கு அலுவலக நேரம்:</u>**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்</u>** திருவருகைக் காலம் - முதல் ஞாயிறு : ( ஆண்டு இரண்டு) சனி 02-12-2017 ஞாயிறு 10-12-2017

எசா 63: 16b-17, 19b, 64: 2b-7 தி.பா 79: 2ac , 3bc 15-16, 18-19 1 கொரி 1: 3-9 மத் 13: 33-37

**கடவுளே, எம்மை மீட்குமாறு உமது முக ஒளியைக் காட்டியருளும் ( தி.பா 79 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. ரீத்தா) | |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (பு. கெட்ருட்)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. கிரஹோரி)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மீண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 04 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 05 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 06 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 07 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 08 | 6.45 கா | திருப்பலி | |

**திருவருகைக் காலம் - இரண்டாம் ஞாயிறு : ( ஆண்டு இரண்டு)**

எசா 40: 1-5, 9-11 தி.பா 84: 9ab, 10, 11-12, 13-14 2 பேதுரு 3: 8-14 மாற்கு 1: 1-8

**ஆண்டவரே, உமது பேரன்பைக் காட்டி எங்களை மீட்டருளும் ( தி.பா 84 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. சோபியா) | |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (பு. ஜேம்ஸ்)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. லியோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மீண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**<u>2017 நவம்பர் (கார்த்திகை) மாத செய்திகள் / நிகழ்வுகள்</u>**

1. **ஆலய காணிக்கை**
   i. 25/26 நவம்பர் ரிம: 9,762.10
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
2. **திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு:**
   I. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (ஆ) : ரி.ம 6.00
   II. அன்றாட சிந்தனை 2018 (ஆங்கிலம் தமிழ் : ரி.ம 20.00
3. **மறைந்த முதன்மைக்குரு (மோன்சின்யூர்) அந்தோணி தோமஸ்** அவர்களுடைய நினைவுப் புத்தகம் விற்பனையில் உள்ளது. விலை. ரிம: 5.00
4. **புனித மாற்கு ஆலயம் ஏற்பாடு செய்கின்ற விடுமுறைக்கால விவிலிய வகுப்பு:** 7 – 9 டிசம்பர் காலை 8.30 – மாலை 4.00 வரை. பதிவுக் கட்டணம் ரி.ம. 10, மேலதிக விபரத்திற்கு : சூசன்னா 013 331 1201

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:**

அ) கொங் கீட் ஜங் & கிரேஸ் ஸோ: 09/12/2017 காலை 11.00
ஆ) ஜோனதன் & ரேச்சல் 09/12/2017 மாலை 3.30

- **2017 ஆம் ஆண்டின் திருவருகைக் காலத்தில் ஒப்புரவாகுவோம்**

  **04-12-2017 (திங்கள்)**
  மாலை 7.30 மணி: அமல உற்பவ அன்னை ஆலயம். போர்ட்டிக்சன்

  **05-12-2017 (செவ்)**
  மாலை 6.45 மணி: அந்தோணியார் ஆலயம், கோலாலம்பூர்
  இரவு 8.00 மணி: கிறிஸ்து அமான் ஆலயம், டேசா ஜெயா
  இரவு 8.00 மணி: செமென்சே

  **06-12-2017 (புதன்)** இரவு 8.00 மணி : புனித தோமஸ் மூர் (சுபாங் ஜெயா)
  மாலை 7.30 மணி: புனித கிறிஸ்டோபர் ஆலயம், கெமாஸ்

  **07-12-2017(வியாழன்)**
  இரவு 8.00 மணி: கிறிஸ்து அரசர், ஆலயம், கெப்போங்

- **ஆலய வளாகம் மற்றும் அறைகள் முன்பதிவு:** கூட்டங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு முன்கூட்டியே அறைகளை பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுங்கள். கடைசி நேர பதிவு அனுமதிக்கப்படாது.

**மினவுதல் தேவாலயத்தில் ஒப்புரவு அருளடையாளம் :**
**22-12-2017 (வெள்ளி)**
மாலை 6.00 திருப்புகழ் மாலை தொடர்ந்து திருப்பலி.
ஒப்புரவு அருளடையாளம்

- **50 ஆம் ஆண்டு திருமண பொன்விழா கொண்டாட்டம்.** திரு திருமதி மார்க் & ஜரின் ஹெண்ட்ரோக் மற்றும் திரு திருமதி அந்தோணி பிரகாசம் & யுவோன். இவர்களுக்கு இறைவனின் அளவற்ற ஆசீருக்காக வாழ்த்துவோம். பொன்விழா ஆண்டு வாழ்த்துகள்

- **சிகாமட் சிற்றாலயம் - புனித பிரான்சிஸ் சவேரியார் திருவிழா** ஞாயிறு 03-12-2017 மாலை 5.00 மணி செபமாலை/திருப்புகழ் மாலை/நற்கருணை ஆசீர் தொடர்ந்து ஒன்றுகூடல். அனைவரும் வருக.
- **கிறிஸ்துவே நமது நம்பிக்கை- பங்கு மனித வள மேம்பாட்டில் குழந்தைகளுக்கான கிறிஸ்மஸ் விருந்து** (வயது 4-17) ஞாயிறு 17-12-2017 பகல் 2.30 மணி. இந்த ஆண்டு பிற சமயத்தைச் சேர்ந்த மற்றும் ஷெல்டர் ஹோம் குழந்தைகள் இதில் பங்கேற்கின்றார்கள். கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான அர்த்தத்தை இவர்களோடுப் பகிர்ந்து கொண்டாடுவோம். கொடுக்கும்போது தான் நாம் பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்மஸ் வாழ்த்து மரத்திலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காகிதத்தை எடுத்து அதில் குறிப்பிட்டுள்ள தகுதியான பரிசுப்பொருட்களை வாங்கி, மரத்தின் அருகே வைக்கப்பட்டிருக்கும் பரிசு பெட்டியில் வைக்கவும் . இறுதி நாள்;10-12-2017
- **உலகை ஆரஞ்சு வண்ணமாக்குவோம்.** குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம். 16 நாட்கள் செபம்/தியானம் - நாட்டுக்காக (25 நவம்பர் -10 நவம்பர் ) கூடுதல் விவரங்களுக்கு பங்கு அகப்பக்கத்தை நாடுங்கள்.
- **2017 ஆம் ஆண்டின் பீடச்சிறுவர்களின் ஆண்டு முகாம்:**
  கருப்பொருள்: " கிறிஸ்துவில் சகோதரத்துவம்"
  நாள்: டிசம்பர் 11-13(திங்கள் - புதன்)
  இடம்: விசிடேசன் செண்டர், ஜலான் லீ சாம் - அனைத்து பீடச்சிறுவர்களும் இதில் கட்டாயம் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றார்கள். இதற்கான ஒப்புதல் கடிதம் விரைவில் பெற்றோர்களுக்கு வழங்கப்படும்.
- **பங்கின் பராமரிப்புக்கு நிதியுதவி எதிர்பார்க்கிறோம்:** பங்கு அளவில் செய்யப்படும் அனைத்து பராமரிப்பு செலவுகளுக்கும் உங்கள் நிதியுதவிகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் நன்கொடைகளை பணமாகவோ காசோலையாகவோ செலுத்தலாம். காசோலைகளை Church of Visitation என்று எழுதி ஆலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்
  **குறிப்பு:** நன்கொடை வழங்குவோர் நீங்கள் வழங்கும் தொகைக்கு வரி விலக்குப் பெற பங்கு அலுவலகத்தை நாடவும்.
- **ஏழைக் குடும்பங்களுக்கு உதவி செய்ய உணவுப் பொருட்கள் தேவை.** (அரிசி, சீனி, கோதுமை மாவு மற்றும் சமையல் எண்ணெய்) இவைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **தமிழ் மறைக்கல்வி** வகுப்புகளில் பயிற்றுவிக்க மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் சூசை செல்வநாதன் அவர்களை தெடர்பு கொள்ளவும். 012 903 6581

- **டிசம்பர் 2 & 3:** புனித பவுல் அடிகளாரின் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகள் புத்தக விற்பனை செய்வார்கள் உங்கள் ஆதரவைத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **டிசம்பர் 2 & 3 :** அருட்சகோதரி பெர்த்தா மற்றும் பெண்கள் குழுவினர் வசதி குறைந்த பெண்கள் குழந்தைகளின் நலனுக்காக, தாமான் பிரிமா என்னும் மலிவு விலை அடுக்குமாடி வீட்டில் பெண்களே குழுவாக இணைந்து இந்தப் பலகாரங்களை செய்து விற்பனை செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பலகாரங்களை விற்பனை செய்ய வருகிறார்கள். வாங்கி ஆதரவு தருமாறு கேட்டுகொள்கிறோம்.
- **கிறிஸ்மஸ் தொண்டூழிய சந்தை:** இடம்: EQ Greenhouse Café & Lodge, எண்: 36, தாமான் சமுத்ரா , பத்து 1, போர்ட்டிக்சன். நாள்: டிசம்பர் 2 & 3 (சனி & ஞாயிறு) தொலைபேசி: 06-646 3436
- **டிசம்பர் 9 (சனி) சோய்ஸ் (ஆங்கிலம்) 100 வாரங்கள் நிறைவு** மற்றும் மலேசிய சோய்ஸ் 36 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நன்றி கொண்டாட்டம்: புனித இக்னேசியஸ் ஆலயம், பெட்டாலிங் ஜெயா (தொடர்புக்கு: டோரீன்: 016-3612146 / கிரேஸ் 012 350 3817)